2020 மார்ச் 18] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

பொது மற்றும் தனியார் பங்களிப்பு முறை (PPP) திட்டத்தின்கீழ் 70 கிலோ மீட்டர் நீள ஒட்டன்சத்திரம்–தாராபுரம்–திருப்பூர் சாலை பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள இரண்டு பணிகள் ஒப்பந்த நிலையில் உள்ளன.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் (TNRDC) சென்னை வெளி வட்டச் சாலை கட்டம் 1 மற்றும் 2–ல் 59.55 கிலோ மீட்டர் சாலைப் பணிகள் முடிவுற்றன. மீதமுள்ள 300 மீட்டர் நீள சாலை நீதிமன்ற வழக்கு முடிவுற்று, விரைவில் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. கேளம்பாக்கம் மற்றும் திருப்போரூர் பகுதிக்கு புறவழிச்சாலை ரூபாய் 243.70 கோடி திட்ட மதிப்பில் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் (TNRIDC). ஓரகடம் தொழிற்பூங்கா சாலை கட்டமைப்பு திட்டத்தின்கீழ் ரூபாய் 378.90 கோடி மதிப்பில் 33.40 கிலோ மீட்டர் நீள வண்டலூர்–வாலாஜாபாத் சாலை நான்கு வழித் தடத்திலிருந்து ஆறு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்தல் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியை 2020 ஆம் ஆண்டிற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கடல்சார் வாரியம். மத்திய அரசின் சாகர் மாலா/ உள்நாட்டுச் சரக்கு தோணித் துறை திட்டத்தின்கீழ் ரூபாய் 135 கோடியில் கடலூர் துறைமுக மேம்பாட்டுப் பணிகள் 2020 ஆம் ஆண்டிற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. கன்னியாகுமரி துறைமுகத்தில், விவேகானந்தர் பாறையில் அமைந்துள்ள படகுத் துறை, ரூபாய் 20 கோடி மதிப்பில் நீட்டிப்பு செய்யப்படவுள்ளது. ரூபாய் 35 கோடி மதிப்பில், கன்னியாகுமரியில், விவேகானந்தர் நினைவுப் பாறையையும், சிறப்பு மிக்க அய்யன் திருவள்ளுவர் சிலை பாறையையும் இணைத்து பாதசாரிகள் நடந்து செல்லும் வகையில் சுமார் 140 மீட்டர் நீளம் கொண்ட கடல்சார் பாலம் அமைக்க தமிழ்நாடு கடல்சார் வாரியம் உத்தேசித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம். 2017–2018 மற்றும் 2018–2019 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மொத்தம் 400 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரி துறைமுகங்களில் பெறப்பட்டு, அவற்றில் 393.87 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரி, அனல் மின்நிலையங்களுக்கு எடுத்து கொண்டு செல்லப்பட்டன. 2019–2020 ஆம் ஆண்டில் 260 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரியை அனல் மின் நிலையங்களுக்கு கொண்டு செல்ல இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2017 முதல்